15-4-1991

# இந்தியத் தேர்தல் மே 20, 23, 26ல் நடைபெறும்

(புதுடில்லி)

இந்தியப் பொதுத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 20ம், 23ம், 26ம் திகதிகளில் நடைபெறும்: தேர்தல் நடைபெறும் இத் திகதிகளை நேற்று மாலை தேர்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 83 பங்குனி 30 றம்ழான் 27 இதழ்: 62

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 13-04-1991

## புத்தாண்டு முதல் யுத்த நிறுத்தம்?

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் புதுவருடத் தினத்திலிருந்து யுத்த நிறுத்தத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு அரசு ஆலோசனை செய்வதாகக் கொழும்பிலிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. புதுவருடத் தினத்திலிருந்து

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் தொடர்புகொள்ள அரசு முயற்சி

(கன்பரா)

வடக்கு-கிழக்கில் புதுவருடத்துடன் தற்காலிக யுத்த நிறுத்தமொன்றை ஏற்படுத்த இலங்கை அரசு விரும்புவதாகவும் இதற்காகப் புலிகளுடன் தொடர்புகொள்ள முயற்சிப்பதாகவும் 'றேடியோ ஆஸ்திரேலியா' நேற்றுக் குறிப்பிட்

(4-ம் பக்கம் பார்க்க)

# ● பலாலியிலிருந்து —— யாழ். நகர்ப்பகுதி நோக்கி பயங்கர ஷெல் தாக்குதல்!

## இருபெண்கள் பலி; நால்வர்காயம், வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

பலாலியிலிருந்து நேற்று நண்பகல் ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் யாழ். நகரத்தில் விழுந்து வெடித்ததில் இரு பெண்கள் பலியானார்கள். நால்வர் படுகாயமடைந்தனர். பல வீடுகள் சேதமடைந்தன சுமார் ஆறு மாதங்களுக்குப் பின்னர் யாழ்.நகர் மீது மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல் காரணமாக நகரமக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டது.

**ஈச்சமோட்டையில்**

நேற்று நண்பகல் 12-45 மணியளவில் பலாலியிலிருந்து நீண்டதூரம் பாயும் ஆட்லரி ஷெல் ஈச்சமோட்டைப் பகுதியிலுள்ள ச. ஜி. அந்தோனிப் பிள்ளை என்பவரின் வீட்டின் சமையலறையில் விழுந்து வெடித்ததில் அங்கு சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த திருமதி அந்தோனிப்பிள்ளை

[4ம் பக்கம் பார்க்க]

## முல்லைத்தீவில் 'அவ்ரோ' அனர்த்தம் கணவன், மனைவி உட்பட மூவர் பலி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறிலங்கா அரசின் அவ்ரோ விமானம் ஒன்று நேற்று முன் தினம் நடாத்திய தாக்குதலில் கணவன். மனைவி உட்பட 3 பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள்.

நேற்று முன்தினம் மாலை 7 மணியளவில் இரணைப்பாலம் பகுதியில் அவ்ரோ விமானம் ஒன்று மூன்று பீப்பாக்குண்டுகளைப் போட்டதில் வைத்தி (வயது 70), திருமதி வைத்தி [வயது 60), யோ. மரியதாஸ் [வயது 45) ஆகிய மூவரும் கொல்லப்பட்டனர்;

(4-ம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி, வலி-வடக்கில் விமானகுண்டுவீச்சு

[நமது நிருபர்கள்]

சாவகச்சேரி. வலிவடக்குப் பகுதிகளில் நேற்று விமான குண்டுவீச்சுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்று முற்பகலும், மாலையும் சாவகச்சேரி, மட்டுவில் வடக்கு-தெற்குப் பகுதிகளில் விமானத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன,

மட்டுவில் வடக்கில் மேற்

[4-ம் பக்கம் பார்க்க]

## காரைநகரில் ஐவர் படுகாயம்

[யாழ்ப்பாணம்]

காரைநகரில் நேற்றுக்காலை இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் ஐவர் படுகாயமடைந்தனர்.

நண்பகல் 12-30 மணியளவில் களபூமி, பாலாவோடை பகுதியைநோக்கி மேற்கொள்ளப்பட்ட 5க்கும் மேற்பட்ட ஷெல் தாக்குதலிலேயே இவர்கள் காயமடைந்தனர்.

கருங்காலி, பலகாடு பகுதிகளை நோக்கியும் ஷெல்தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

**அரசு அறிக்கை**

இதேவேளை காரைநகர் கடற்படைமுகாம்மீது புலிகள் தொடர்ந்தும் உக்கிரமாய்

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு இது கடைசி சந்தர்ப்பமாம்

[கொழும்பு]

வடக்கு-கிழக்கு பிரச்சனைக்கு தமது பதவிக்காலத்துள் தீர்வு காணப்படாவிடில் இதற்கொரு தீர்வு காணமுடியாதென ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளாராம்:

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் ஆசிரியரை விரட்டி சிங்களவர் நியமனம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ் கிராமம். ஒன்றில் உள்ள பாடசாலையில் கல்வி கற்பித்து வந்த யோகராசா என்னும்தமிழ் ஆசிரியர் விரட்டியக்கப்பட்டு அவருக்கு பதிலாக சந்திரசேன என்னும் சிங்கள ஆசிரியர் நியமிக்கப் பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அரசின் திட்டமிட்ட இந் நடவடிக்கை மூலம் இக்கல்லூரியில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்கள் தமிழை கற்க முடியா

(4-ம் பக்கம் பார்க்க)

## மண்டைதீவுக் கடலில் 37 மீனவர் கைது!

[யாழ்ப்பாணம்]

மண்டைதீவு கடற்பகுதியில் நேற்று முன்தினமிரவு 37 மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க]

## தமிழ் மொழியில் சிங்கள மாணவர் ஆர்வம்

(கொழும்பு)

தென்பகுதியல் கடந்தவருடம் பிற்பகுதியில் இடம்பெற்ற க. பொ த. (சாதாரண) பரீட்சையில் 12,500 சிங்களவர் 2வது விருப்பு மொழியாக தமிழை தெரிவு செய்துள்ளனர்.

10,000 தமிழ் மாணவர்கள் சிங்களமொழி பரீட்சைக்கும், 81,846 மாணவர்கள் ஆங்கில பரீட்சைக்கும் தோற்றியிருந்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. பரீட்சை அனுமதி அட்டை வந்தது

[யாழ்ப்பாணம்]

''கல்விப் பொதுத் தராதர உயர்தர விசேட பரீட்சை 1990-ஆம் ஆண்டுக்கான அனுமதி அட்டைகள் யாவும் யாழ். கல்வித் திணைக்களத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

(4ம் பக்கம் பார்க்க)

## பொத்துவில் தமிழ் மீனவர் படையினரால் விரட்டியடிப்பு

[அம்பாறை]

பொத்துவில் பகுதியில் பாரம்பரியமாக வசித்து வந்த தமிழ் மீனவர்கள் முஸ்லிம் ஊர்காவற்படையினராலும் இராணுவத்தாலும் விரட்டியடிக்கப்பட்டு இவர்களுக்கு பதிலாக பெருமளவு சிங்கள மீனவர்களும்,முஸ்லிம்களும் இப்பகுதியில் குடியமர்த்தப்பட்டு வருவதாக செய்தி

[4 ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்


### இருள் இரவில் அல்ல

மீரா வெளியீடு எந்த ஒரு ஆணும் வயதான காலத்தில் மனைவியை இழக்கக்கூடாது. அதேபோல் எந்த பெண்ணும் இளம் வயதில் கணவனை இழக்கக் கூடாது. இழந்தால்?

(சி 4618)

### உருவச்சிலைகள்

வெண்கல உருவச்சிலைகள் செய்து கொடுக்கப்படும். விபரங்களுக்கு: சிற்பி P. சிங்கம், 13, கோவில் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (சி 4627)


# உணவுப் பொருள்களின் விலை குறைப்பதற்கு நடவடிக்கை

(காங்கேசன்துறை)

யாழ். மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைத்து, நியாய விலைக் கொள்கையைத் தீர்மானிக்க அரச அதிகாரிகளும் ப. நோ. கூ. சங்கப் பிரதிநிதிகளும் அடங்கிய குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

தற்போதைய நெருக்கடி நிலைமையினால் பொருட்களின் விலைகளில் பாரிய உயர்வு காணப்படுகிறது. அத்துடன் இடத்திற்கிடம் விலையில் வித்தியாசம் ஏற்படுகிறது

இதற்காக யாழ். அரசாங்கச் செயலகத்தைச் சேர்ந்த உதவித் திட்டப் பணிப்பாளர், கூட்டுறவு உதவி ஆணையாளர், புனர்வாழ்வுப் பிரிவுக் கணக்காளர், ப. நோ. கூ. சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழு விரைவில் புதிய விலைக் கொள்கையைத் தீர்மானித்து அறிமுகப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. (86)


ஆசிரியர்கள், மாணவர்கள், அனைவருக்கும் எமது புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேஷன் றோட், கோண்டாவில்.

**A|L** 91, 92 கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புக்கள்

பொருளியல்: திரு. உதயன்
கணக்கியல்: திரு. ஸ்ரீ
வர்த்தகம்: திரு. தேவா
அளவையியல்: திரு S S. மனோகரன்
புவியியல்: திரு. வேலா
இந்துநாகரீகம்: திருமதி அருள்நங்கை
தமிழ்: திரு. குழந்தை
அரசியல்: திரு. நவம்
வரலாறு: பிரபல ஆசிரியர்

இரசாயனவியல்: திரு. செல்வா
பௌதிகவியல்: திரு. கணேசன்
தூய, பிரயோக கணிதம்: திரு. கமலசிங்கம்
தாவரவியல்: திரு. பாலா
விலங்கியல்: திரு. தங்கராஜா

★

தனித்துவம் மிக்க ஆசிரியர் குழுவினரால் சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றது.

★

மேலதிக விபரங்களுக்கு: நிர்வாகி

(ஏ 1218)

### ராகு கேது மாற்றம்

13-4-91ல் ராகுகேது மாற்றமும் புத்தாண்டுப் பலன்களும் ரூ 6/—எங்கும்கிடைக்கும். ராகு கேது மாற்றத்தின் பின்னும் செவ்வாயின் கெட்ட பார்வையால் யுத்தம் தொடரும். Prof. சத்தியதாஸன் ஞானம்ஸ், சித்தன்கேணி சந்தி [சி-4639]

### விலங்கியல் வகுப்பு

G. C. E. (A/L) 91, 92, மீள் வகுப்புகளுக்கான விலங்கியல் பாடம் அனுபவம் வாய்ந்த பட்டதாரி கல்லூரி ஆசிரியரினால் தனிப்பிட்ட முறையில் கற்பித்துக்கொடுக்கப்படும். தொடர்பு: 63, பொற்பதி வீதி, கொக்குவில். (சி 4523)

### பாலாஜீ புத்தகசாலை

செங்கை ஆழியானின் யாக குண்டம், ஆறுகால்மடம், கந்தவேள் கோட்டம் மற்றும் புவியியல், வரலாறு முதலிய புத்தகங்கள் விற்பனைக்குண்டு. (புத்தாண்டை முன்னிட்டு விசேட தள்ளுபடி) 15/6, முதலாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-4634)


## அல்லைப்பிட்டியில் நெற்சூடு விஷமிகளால் தீக்கிரை

(புங்குடுதீவு)

அல்லைப்பிட்டி பகுதியில் உள்ள வயலொன்றில் அறுவடை செய்து வைத்திருந்த நெற்சூடு ஒன்று இனந்தெரியாத விஷமிகள் கூட்டமொன்றினால் எரியூட்டப்பட்டுத் தீக்கிரையானது.

விஷமிகளின் இந்தச் செயலினால் சுமார் இருபத்தைந்துக்கும் அதிகமான நெல்மூடைகள் நாசமாகின.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. (101)

## சொந்த இடங்களுக்கு தமிழ் அகதிகள் திருப்பம்

கொழும்பு)

கொழும்பிலுள்ள அகதி முகாம்களில் நிலவும் சுகாதார சீர்கேட்டினை அடுத்து அங்குள்ள தமிழ் அகதிகள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பில் நான்கு முகாம்களில் 2,400 தமிழ் அகதிகள் தற்போது இருக்கிறார்கள்.

தமது சொந்த இடங்களில் நிலவும் பாதுகாப்பற்ற சூழ்நிலையை அடுத்து இந்த அகதி முகாம்களில் தஞ்சமடைந்த கிழக்கு மாகாண அகதிகள் பலர் இந்த முகாம்களில் நிலவும் சுகாதார குறைபாடுகளையடுத்து தமது சொந்த இடங்களுக்கு தற்போது திரும்பி வருகின்றனர்.

இவர்களுக்கான உதவிகளை அரச சார்பற்ற நிறுவனங்களும், சமூக சேவை இலாகாவினரும் வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (ரி

## கம்பன் கழகத்தின் 10-வது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகத்தின் பத்தாண்டு நிறைவையொட்டி புத்தாண்டு கவிதைப் பட்டி மண்டபம் நாளை ஞாயிறு மாலை நல்லூர் கம்பன் கோட்டத்தில் திரு. க. சிவராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

''நாமிருக்கும் நாடு நமதென்று அறிந்தோம்'' என்ற தலைப்பில் வித்துவான் க ந வேலன் தலைமையில் இந்த கவிதை பட்டி மண்டபம் நடைபெறும்.

இக்கவிதை நிகழ்வில் பிரபல்யமிக்க கவிஞர்கள் கலந்து கொள்கிறார்கள்.

என். ஆர். சின்னராசா, என். கே. பத்மநாதன் ஆகியோரின் நாதஸ்வர, தவில் கச்சேரிகளும் சிறப்பு நிகழ்ச்சியாக நடைபெறவுள்ளது.


# இன்றைய சேமிப்பு நாளைய சந்ததியின் பாதுகாப்பு ..................

உங்கள் குழந்தையின் எதிர்காலம் வளமானதாக அமைய.....

இன்றே **"ஷப்ருவுடன்"** இணைந்து சேமியுங்கள்.

நிதித் துறையில் நேசக்கரம் நீட்டும் நண்பன்

**"ஷப்ரு"** யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்,

2, ஆர். ஏ. டி. மெல் மாவத்தை, கொழும்பு - 04.
தொலைபேசி எண்: 508087 - 90.

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ 1223)


### உதைபந்தாட்டப் போட்டி

(கொழும்பு)

தமிழ்-சிங்கள புத்தாண்டு தினத்தை முன்னிட்டுபாராளுமன்றத் தெரிவுக் கோஷ்டியும், பொலிஸ் தெரிவுக்கோஷ்டியும் சினேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டியொன்றில் கலந்து கொள்ளவுள்ளனர்

இம்மாதம் 17ம் திகதி மேற்படி போட்டி பம்பலபிட்டி பொலிஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது. (வி)

### ரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அத்தியடிப் பிள்ளையார் கோயில் ரதோற்சவம், நாளை புது வருடப் பிறப்பன்று நடைபெறவுள்ளது. அன்றைய தினம் காலை 8-00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும், டஞ்சமுகார்ச்சனையும் நடைபெற்று 9-00 மணிக்கு ரதோற்சவம் நடைபெறும்.

### புதிய நிர்வாகிகள்

[பருத்தித்துறை]

கரவெட்டி அண்ணாசிலையடி வள்ளுவர் சனசமூக நிலைய தலைவராக மா பரமானந்தமும், செயலாளராக மு மகேந்திரனும், பொருளாளராக மா. சண்முகலிங்கமும், நூலகராக சி. தர்மகுலசிங்கமும் தெரிவுசெய்யப்பட்டனர். அத்துடன் 5 பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவானது. (52)

0 0 0

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் 1991ம் ஆண்டுக்கான நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. கனகசபாபதி நாகேஸ்வரன், செயலாளர் திரு நா. க. குமாரசூரியர் பொருளாளர் திரு. க உருத்திரகுமாரன், இத்தெரிவும் ஏகமனதாக நடைபெற்றது.

### கடையுடைத்து திருட்டு

(யாழ்ப்பாணம்)

பல சரக்குக் கடை ஒன்று உடைக்கப்பட்டு சீனி, மா, பருப்பு, சன்லைட் போன்ற பொருட்கள் திருடப்பட்டன.

நவாலி வடக்கு அரசடியை சேர்ந்த சண்முகம் என்பவருக்குச் சொந்தமான கடையிலேயே நேற்றுமுன்தினம் இத்திருட்டுச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (க)

### ஓய்வுபெற்றார்

(கொழும்புத்துறை)

நெடுங்குளம் கிராமசேவை அலுவலர் திரு.கே எஸ்.இராசையா சுய விருப்பத்தின் பேரில் இளைப்பாறியுள்ளார்.

இவர் ஒரு சிறந்த சமய, சமூக சேவையாளர் என்பது குறிப்பிடத்தக்கது. (154)

# காகித உற்பத்தி பற்றி கண்காட்சியில் விளக்கம்

"பசிக்கொரு தொழில் பயின்றிடுவோம்" என்பது கவிஞர் ஒருவரின் அமுத மொழி.

வீசி எறியும் பொருள்களில் இருந்து எத்தனையோ விதமான பொருள்களைக் கலை அழகு மிளிர உருவாக்கலாம் இதன் மூலம் அந்தப் பொருள்களை மீண்டும் நல்லபடியாகப் பயன்படுத்தலாம் என்பது மட்டுமல்ல, எத்தனையோ பேர் இதனால் வருவாய்பெற்று வாழவும் முடியும். இதனை வலியுறுத்தும் விதத்தில் முறைசாராக் கல்விப்பிரிவு உபவள நிலயத்தினரின் கண்காட்சி அமைந்திருந்தது.

மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் இரு தினங்கள் நடைபெற்ற இக்கண்காட்சியில், கழிவுப் பொருள்களில் இருந்து இலகுவாகச் செய்யக் கூடிய பல பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இது பலரது கவனத்தையும் ஈர்த்தது என்றே கூறலாம்.

காகிதத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள எமது பகுதியில் காகிதத்தை எவ்விதம் செய்யலாம் என்பது ஒரு பகுதியில் விளங்கப்படுத்தப்பட்டது. அத்துடன் விற்பனைக்கும் இங்கு செய்யப்பட்ட காகிதங்களும், கடித உறைகளும் கட்டுக்கட்டாக வைக்கப்பட்டிருந்தன.

இவற்றை எல்லாம் பார்வையிட்டபோது 'செய்யும் தொழிலே தெய்வம்; நம் திறமைதான் நமக்குச் செல்வம்; கையும் காலும் தான் நமக்கு உதவி, கொண்ட கடமைதான் நமக்குப் பதவி' என்றொரு கவிதையும் நினைவுக்கு வந்தது. போல் பொயின்ட் பேனைக்களை நாம் இனி எறியத் தேவையில்லை. ஆம், அவற்றைக் கொண்டு அழகான பிரஷ்களைச் செய்யலாம். இந்தக் கண்காட்சியைப் பார்த்தவர்கள், இந்த முடிவுக்கு வந்திருப்பார்கள்.

புத்தகம், புத்தகம் என்று சுமைதாங்கிகளாகிவிட்ட நமது சின்னஞ் சிறிசுகள் அன்று எத்தனையோ கைப்பொருள்களைக் காட்சிக்கு வைத்துவிட்டு விளக்கம் அளிப்பதற்காகச் சுறுசுறுப்புடன் காத்துநின்றது பார்ப்பதற்கு வெகு உற்சாகமாகவே இருந்தது.

திட்டம் —இது நம்மிடம் மிகக் குறைவான ஒரு விஷயம். இக்கண்காட்சியில் அதன் அவசியத்தை ஒரு பகுதியில் நன்கு வலியுறுத்தியிருந்தார்கள். ஒரு நல்ல கட்டடம் நிர்மாணிப்பதற்கு இது எவ்வளவு அவசியம் என்பது இந்தப் பகுதியில் பரவலாக விளக்கப்பட்டிருந்தது.

இப்படிப் பல பகுதிகள்.

ஜப்பான் முன்னேறிவிட்டது; அந்த நாடு முன்னேறிவிட்டது; இந்த நாடு முன்னேறிவிட்டது என்று சொல்லிக்கொண்டிருக்காமல், இவ்விதக் கைத்தொழில் துறைகளில் ஊக்கம் கொண்டு உழைத்தால் நாமும் நிச்சயம் முன்னேறமுடியும் என்பதற்கு இக்கண்காட்சி ஒரு உந்துசக்தியாக இருந்தது என்று கூறினால் மிகையாகாது.

- கணேஷ் -

---

கைலயங்கிரி

## வெள்ளோட்ட விழா

[யாழ்ப்பாணம்]

நீர்வேலி கந்தசாமி கோவில் கையிலயங்கிரி விமான வெள்ளோட்டவிழா இம்மாதம் 15ம் திகதி காலை 11 மணிக்கு நடைபெறும்.

இவ்விழாவில் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கம்பன் கழக அமைப்பாளர் திரு இ ஜெயராஜ் ஆகியோர் சிறப்புரை வழங்குவார்கள்.

---

## இராசி பலன்

13 04 1991

சனிக்கிழமை

சதுர்த்தசி பி. இ. 2-57 வரை.

உத்திரட்டாதி பி. இ 12-59 வரை.

சித்தயோகம்

இராகுகாலம் காலை 9-06 முதல் 10-36வரை.

சுபநேரம் மாலை 3-06 முதல் 4-36வரை.

விஷு புண்ணிய காலம் பின்னிரவு 3-22 முதல்

மேஷம்: வாழ்க்கை வசதி தொழில் வெற்றி. இனசன உதவி.

இடபம்: மறைமுகஎதிர்ப்பு தெய்வ தரிசனம். தொழில் குறைவு.

மிதுனம்: காரிய வெற்றி, பலவகை உதவி. அதிகாரிகள் பாராட்டு.

கடகம்: இனசனப் பகை. தொழில் லாபம். வாக்கு வன்மை.

சிங்கம்: தானதர்மம். காரியதாமதம் குடும்பக்கவலை.

கன்னி; குடும்பவிரோதம். அதிகயோசனை படபடப்பு;

துலாம்; அதிகவருமானம். குடும்ப மகிழ்ச்சி; உல்லாசப் பயணம்.

விருச்சிகம்: மனப்போராட்டம். குடும்ப சுகம். தொழில் சிறப்பு.

தனுசு: தொழில் பாதிப்பு புதிய சிக்கல். குடும்ப பிரிவு.

மகரம்: வருமானம் குறைவு; வேலையாள் தொல்லை. அந்நிய வாசம்.

கும்பம்; மனக்களிப்பு. வீட்டில் சுபகாரியம். புதிய உறவு.

மீனம்: பெரியோர் ஆசி. தொழில் வாய்ப்பு, சகோதரர் உதவி.

— ஜோஸ்யர்

---

அனைத்துலக ஆசிரியரின்

## ஆன்மீக யாத்திரை

[யாழ்ப்பாணம்]

அனைத்துலக ஆசிரியர் இ. சங்கரப்பிள்ளை யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல கல்லூரிகளுக்கு ஆன்மீக யாத்திரை ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

இம்மாதம் 9ம் திகதி தனது பழைய கல்லூரி யாழ். இந்து கல்லூரிக்கும், 10ம் திகதி யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்கும், யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கும் சென்று தான் ஆக்கிய போதிப்பிள்ளையார் 'ஆற்றுப்படை' பற்றியும் போதிப்பிள்ளையார் மகிமை பற்றியும் ஆசிரியர் மன்றங்களில் சொற்பொழிவாற்றியுள்ளார்.

விடுமுறையின்பின் ஏனைய கல்லூரிகளுக்கும் செல்லவுள்ளார்.

---

## திங்கள் வங்கி திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

புதுவருடத்தை முன்னிட்டு சபவேளையில் வங்கிக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு வசதியாக 15ம் திகதி திங்கட்கிழமை காலை 9-15 முதல் 9-45 வரை ஹற்றன் நஷனல் வங்கி திறந்திருக்கும். இத்தினத்தன்று பண வைப்புகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப் படுமென வங்கி அறிவித்துள்ளது.

பராயமடையாதவர்கள், குழந்தைகளுக்கான சேமிப்புக் கணக்குகளையும் ஆரம்பிக்க முடியும் இதற்குரிய வட்டி வீதம் அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

---

## கிரிக்கெட்போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கை வர்த்தக வங்கி யாழ். கிளை அணிக்கும் வட பிராந்திய விற்பனை பிரதிநிதிகள் குழுவுக்கும் இடையிலான மென்பந்து கிரிக்கெட்போட்டி எதிர்வரும் 15ம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்,

யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் காலை ஒன்பது மணிக்கு மேற்படி போட்டி ஆரம்பமாகும்.

---

# கப்பல் - படகு விபத்து 140 பயணிகள் பலி

(லண்டன்)

இத்தாலியில் எண்ணைக் கப்பல் ஒன்றும் பயணிகள் படகு ஒன்றும் மோதிக்கொண்டதில் பயணிகள் படகில் சென்று கொண்டிருந்த 140 பயணிகளும் கொல்லப்பட்டிருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

எண்ணைக் கப்பலில் ஏற்பட்ட தீ, பயணிகள் கப்பலில் பரவி இரு கப்பல்களும் எரிந்து கொண்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

---

# இலங்கை வங்கி விசேட வட்டி வழங்குவதற்கு முடிவு

(யாழ்ப்பாணம்)

தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு, இலங்கை வங்கி கடந்த மாதம் 15ம் திகதிக்குப் பின்பும், இம்மாதம் 30ம் திகதிக்கு முன்பும் சேமிப்புக் கணக்கில் பணத்தை முதலீடு செய்பவர்களுக்குவிசேடவட்டி வீதத்தை வழங்க முன்வந்துள்ளது.

இதன்பிரகாரம் 6 மாதங்களுக்கு பணத்தை முதலீடு செய்பவர்களுக்கு 16 வீத வட்டியும், ஒரு வருடத்துக்கு முதலீடு செய்பவர்களுக்கு 17வீத வட்டியும், இரண்டு வருடங்களுக்கு முதலீடு செய்பவர்களுக்கு 18 வீதவட்டியையவழங்கவிருக்கிறது. (வி)

---

## வில்லி லில்லி வருகிறது

(யாழ்ப்பாணம்)

பணம் மற்றும் தபால் பொதிகளுடன் 'வில்லி லில்லி' கப்பல் இன்று பருத்தித்துறை வந்தடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (56)

---

# கூட்டுறவுச் சபை நடத்தும் சுகாதாரக் கருத்தரங்கு

[காங்கேசன்துறை]

உள்ளூர் உற்பத்தியைஊக்குவிக்கும் முறையில் பல்வேறு சுயமுயற்சிகளில் ஈடுபட்டுள்ள கூட்டுறவு பணியாளர்கள் சுகாதார செயல்முறைகளையும் அறிந்துகொள்ள வசதிசெய்யுமுகமாக யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை சுகாதாரக்கருத்தரங்குகளை ஏற்பாடு செய்துள்ளது.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை அலுவலகத்தில் இம்மாதம் 20ம் திகதி நடைபெறவுள்ள சுகாதார கருத்தரங்கில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் பங்குபற்ற உள்ளனர்.

நல்லூர் ப நோ கூ சங்க தலைவர் திரு. பெ. கனகசபாபதி தலைமையில் நடைபெறும். இக்கருத்தரங்கை யாழ். மாவட்ட தேசிய கூட்டுறவுச் சபைத்தலைவர் திரு. எஸ். சிவமகாராசா ஆரம்பித்துவைப்பார். [86]

---

## சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஸ்ரான்லி வீதியில் கடைக்கு முன்பாக நிற்பாட்டப்பட்டிருந்த சைக்கிள் ஒன்று திருடப்பட்டது.

நவாலி தெற்கைச் சேர்ந்த சீலன் என்பவருடைய சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டதாகும்.

சைக்கிளில் பால்மா வகைகள் உட்படப் பல பெறுமதியான பொருட்கள் வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (க)

---

# தமிழ்நாடு தேர்தல் களம்

## "ஈழத் தமிழர்கள் தமிழகத்தை விட்டால் வேறு எங்கு போவார்கள்"

(சென்னை)

"ஈழத்தமிழர்களுக்கு தாயகமான தமிழகத்தைவிட்டால் அவர்கள் வேறு எங்கு போவார்கள்?" தஞ்சையில் நடைபெற்ற தமிழக இளைஞர் முன்னணிக் கூட்டத்தில் பேசிய திரு. ப. நெடுமாறன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: தமிழர் தேசிய தன்னுரிமை மாநாடு நடத்தத் திட்டமிட்டோம். அப்போது ஆட்சியிலிருந்த கலைஞர் அரசு என்னையும் மற்றும் செயல்வீரர்களையும் கைது செய்தது ஆனால் அவருக்கும், தி. மு. க. விற்கும் கடைசியில் என்ன நடந்தது?

டெல்லிக்கு ஓடி ஓடி சாமரம் வீசினார்கள். தி. மு, க. ஆட்சியைக் கலைத்துவிடுவார்கள் என்று பயந்து, தமிழகத்தில் பயிலும் ஈழமாணவர்களைக் கைது செய்து மத்திய அரசுக்கு புள்ளிவிபரம் காட்டினார்கள். இவர்கள் குனியக்குனிய மத்திய அரசுக்கு தைரியம் வந்தது; தி. மு. க. ஆட்சியைக் கலைத்துவிட்டது.

## இந்தியா அமைப்பு மாறும்

"அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு இல்லையென்று காரணம் காட்டி 'கலைப்பு' என்ற பெயரில் ஜனநாயகப் படுகொலை செய்துள்ளனர்; இது தொடர்ந்தால் இந்தியாவின் அமைப்பே மாறும்".

சென்னை நுங்கம்பாக்கத்தில் நடந்த தி. மு. க கூட்டத்தில் பேசிய திரு வை. கோபாலசாமி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: ஜனநாயக விளக்கை ஊதி அணைக்கப் புறப்பட்டவர்களை கவனிக்க, 40 லட்சம் தொண்டர்கள் புறப்பட்டுவிட்டார்கள். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்பது வெளிச்சத்தில் இருந்துகொண்டே இருட்டைத் தேடுகிறகதை. இனிமேல் காங்கிரஸ் வெற்றி பெறாது. தென்னகம் காங்கிரஸிற்கு எதிராக புறப்பட்டுள்ளதென்பதை கேரளம் நிரூபித்துவிட்டது.

திரு. மு. க. ஸ்டாலின் பேசுகையில் கூறியதாவது தி மு. க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்கிறார்கள். அப்படிக் கெட்டிருந்தால் சுப்பிரமணியசுவாமி சென்னை வந்திருக்க முடியுமா? வாயில் வந்தபடி அவர் பேசத்தான் முடியுமா? டெல்லியில் பாதுகாப்பு இல்லையென்று தானே உலக திரைப்பட விழாவை மத்திய அரசு சென்னையில் நடத்தியுள்ளது.

## எப்படிக் கூட்டுச் சேர முடியும்?

"கலைஞர் கருணாநிதி எமக்குச் செய்த கொடுமைகளுக்கு நாம் எப்படி அவருடன் கூட்டுச்சேர முடியும். நாங்கள் எல்லாத் தொகுதிகளிலும் தனியாகவே போட்டிபோடுவோம்".

தாயக மறுமலர்ச்சிக்கழகத் தலைவர் திரு. டி. ராஜேந்திரன் சென்னையில் நடந்த கமிட்டிக் கூட்டத்தில் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: நாம் கட்சி ஆரம்பித்த இரண்டே மாதத்தில் 40,000 வாக்குகளைப் பெற்றோம். கலைஞரைத் தூங்கவிடாமல் செய்தோம்.

## தேர்தல் தொகுதி அறிவிப்பு

தமிழ்நாட்டில் நாடாளுமன்ற மக்களவைக்கும் மாநில சட்டப்பேரவைக்கும் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் தேர்தலில் இ காங்கிரஸ்-அ இ. அ. தி மு க. கூட்டணி இரு கட்சிகளும் போட்டியிடும் தொகுதிகள் அறிவித்துள்ளன.

இ. காங்கிரஸ் தமிழ் நாட்டில் 28 மக்களவைத்தொகுதிகளிலும், அ. இ. அ. தி. மு. க. 11 தொகுதிகளிலும் போட்டியிடவுள்ளன.

## தி. மு. க. 175 தொகுதியில் போட்டி

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் 175 இடங்களில் போட்டியிடுமென்று தி. மு. க தலைவர் திரு. மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

ஜனதா தள், மார்க்சிச கம்யூனிஸ்ட்கட்சி, இந்திய கம்யூனிஸ்ட்கட்சி, திருநாவுக்கரசு அணிகளுடன் தொகுதிஉடன்பாடு பற்றி பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

# க.பொ.த. உயர்தர பரீட்சை நேரசூசி

(யாழ்ப்பாணம்)

ஏப்ரல் 23ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 30-10.30 விலங்கியல் I, 8.30-11.30 பிரயோக கணிதம் I, சரித்திரம் II மாலை 12.30-15 30 சரித்திரம் I.

ஏப்ரல் 24ம் திகதி - புதன்கிழமை காலை 8 30 - 11-30 பிரயோக கணிதம் II, விலங்கியல் II, கிரேக்க உரோம நாகரீகம் I, சித்திரம் I மாலை 12.30 - 15.30 மனைப் பொருளியல் I, இலத்தீன் I

ஏப்ரல் 25ம் திகதி வியாழக்கிழமை, காலை 8 30 - 11.30, தூயகணிதம் I, பௌத்த நாகரீகம் I, மாலை 12 30-15-30 மனைப்பொருளியல் II, இலத்தீன் II.

ஏப்ரல் 26ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 - 10-30 தாவரவியல் I, 8.30 - 11.30 புத்த சமயம் I, தமிழ் I. மாலை 13.30-16-30 தூயகணிதம் II, பௌத்தநாகரீகம் II.

ஏப்ரல் 27ம் திகதி சனிக்கிழமை காலை 8.30 – 11.30 தாவரவியல் II, புத்த சமயம் II, தமிழ் II, மாலை 12.30 - 15.30 சங்கீதம் I, சிங்களம் சங்கீதம் கர்னாடகம் I, சங்கீதம்மேலத்தேய I.

ஏப்ரல் 29-ம் திகதி திங்கட்கிழமை காலை 8 30 - 10.30 இரசாயனவியல் I, 8.30-11.30 பொருளியல் I, மலாய் II, பேர்சியமொழி I, இந்தி I. மாலை 13 30 – 16.30 நாட்டியம் பரதம் நாட்டியம் சிங்களம் I, அரபு I, யப்பானிய மொழி I.

மிகுதி பாடங்களின் நேர அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும். (152)

## க, பொ. த-

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

மேலும் அவர்கூறியதாவது: பாடசாலைகளின் மூலம் விண்ணப்பித்தவர்களின் அனுமதி அட்டைகள் அந்தந்தக் கொத்தணியில் அதிபர்கள் பெற்றுக்கொள்ளலாம். தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். இடம் பெயர்ந்த மாணவர்கள் அவரவர் கல்விக் கோட்டங்களிலும் தனிப்பட்ட. இடம் பெயர்ந்த பரீட்சார்த்திகள் அந்தந்தப் பிரதேசத்திலுள்ள கோட்டங்களிலும் அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றார். (152)

## இந்தியத்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தல் கமிஷனர் திரு. ரி. என். சேஷன் புதுடில்லியில் அறிவித்தனர்.

தமிழ்நாடு, யூனியன் பிரதேசமான புதுவை. கேரளம், மேற்கு வங்காளம், ஹரியானா, உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கான தேர்தல்களும் மக்களவை தேர்தலுடன் ஒருமித்து நடத்தப்படும்.

பஞ்சாப், ஜம்முகாஷ்மீர், அஸாம் மாநிலங்களுக்கான தேர்தல் திகதிகள் பின்பு அறிவிக்கப்படும் எனவும் தேர்தல் கமிஷனர் கூறினார். (பூ)

## புத்தாண்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்காலிகமாக யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்துவதற்கு அரசு ஆலோசித்துவரும் இவ்வேளையில், யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்தினால் அதில் ஏற்படும் நன்மை தீமைகளை அரசுக்கு உடன் தெரிவிக்குமாறு இராணுவத் தளபதிகளிடம் ஆலோசனை கேட்கப்பட்டுள்ளதாகவும் இவர்களின் ஆலோசனைகளைத் தொடர்ந்தே யுத்த நிறுத்தம் பற்றிய இறுதிமுடிவு எடுக்கப்படலாம் என்றும் கூறப்படுகின்றது. (வி)

## புலிகளுடன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டது.

இதற்காக லண்டனில் அல்லது பாரிஸிலுள்ள புலிகளின் பிரதிநிகளுடன் தொடர்பை இலங்கை அரசு ஏற்படுத்தும் சாத்தியம் அதிகரித்துள்ளதாகவும் அவ்வானொலி கூறியது.

மேலும் இந்தத் தற்காலிக யுத்த நிறுத்தம் எவ்வளவு தூரம் சாத்தியப்படும் என்பது கேள்விக்குறியாக இருப்பதாகவும், யுத்த நிறுத்தம் தொடரும் பட்சத்தில் பேச்சுவார்த்தைக்கு இலங்கை பழைய நிபந்தனைகளையே தொடர்ந்தும் முன்வைக்குமா என்பது கேள்விக் குறியாகவே இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டது. (சி)

## தமிழ் ஆசிரியரை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளதுடன் சிங்களம் கற்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குப் உள்ளாக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## பலாலியிலிருந்து

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

திரேசா முகம் சிதைந்த நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானார்.

மரணமானவரின் சகோதரி லூர்த்து படுகாயமடைந்தார்.

## பாஷையூரில்

பாஷையூர் பகுதியில் உள்ள வீட்டுக்குசினியில் மற்றொரு ஷெல் வீழ்ந்து வெடித்ததில கொட்டடியில் இருந்து இடம் பெயர்ந்து தனது சகோதரர் வீட்டில் வசித்துவந்த திருமதி கோணேஸ்வரி துரைராசா (வயது 52) ஸ்தலத்தில் பலியானார்.

இவரது இருபிள்ளைகளான செல்வி இந்துலதா துரைராசா (18 வயது), துரைராசா உதயராசா (வயது 16) படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் வசித்துவந்த வீடும் சேதமுற்றுள்ளது.

## கொழும்புத்துறையில்

மூன்றாவது ஷெல் கொழும்புத்துறைப் பகுதியில் இருவீடுகளுக்கிடையில் வீழ்ந்து வெடித்ததில் அவ்வீடுகள் இரண்டு பலத்த சேதமுற்றுள்ளன. இவை விழும்போது வீட்டிலிருந்தோர் தெய்வாதீனமாக உயிர் தப்பினர். இச்ஷெல் துண்டு சிதறியதில் முன்பாக உள்ள கடைக்குள்நின்ற உரிமையாளர் சிதம்பரம் நடராசா (வயது 41) என்பவர் காயமடைந்தார்.

இப்பகுதியில் விழுந்தஷெல் குண்டொன்று வெடிக்காதநிலையில் விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்டது.

அடுத்தஷெல் பாஷையூர் கடற்கரை பேக்கரிக்குப் பின்புறமாக உள்ள கடலில் வீழ்ந்து வெடித்தது. இச் ஷெல் வீச்சின்போது 5 விடுகள் சேதமாகின. (வி-56)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் இதாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலுவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under licence Number Q/162509/81.

## மன்னார் மாணவர்களுக்கு

[யாழ்ப்பாணம்]

இடம் பெயர்ந்த மன்னார் மாவட்ட மாணவர்களுக்கு க. பொ. த. (உயர்தர)விசேட பரீட்சை எழுதுவதற்குபெரிய பண்டிவிரிச்சான் பாடசாலை பரீட்சை நிலையமாக ஆணையாளரால் அங்கிகரிக்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்த மாணவர்கள் தற்போது வதிகின்ற மாவட்டத்தில் க. பொ. த. (உயர்தர) விசேட பரீட்சை 1990 எடுப்பதற்கும் பரீட்சை ஆணையாளர் ஒப்புதல் அளித்திருக்கின்றார் எனத் தெரிய வருகிறது. [152]

## கவிதைத் தொகுப்பு

[யாழ்ப்பாணம்]

மு. வை. வோ. வாஞ்சிநாதன் அவர்களின் 'தமிழரின் தாகம்' என்னும் கவிதைத் தொகுப்பு வெளிவந்துள்ளது. இது தமிழ்தாய் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ளது

## இலங்கை வங்கி திங்கட்கிழமை திறந்திருக்கும்

[யாழ்ப்பாணம்]

புதுவருடத்தை முன்னிட்டு எதிர்வரும் 15-ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். இலங்கை வங்கியின் பின்வரும் கிளைகள் காலை 9-00 மணி தொடக்கம் 10-00 மணி வரை திறந்திருக்கும்.

யாழ்ப்பாணம் 2-வது கிளை (ஸ்ரான்லி வீதிக் கிளை), மானிப்பாய், சுன்னாகம், பருத்தித்துறை, நெல்லியடி.

சிறுவர்களுக்கான புதுக்கணக்குகள் ஆரம்பித்தல். சேமிப்புச் சான்றிதழ் விற்பனை போன்ற கருமங்கள் அன்று நடைபெறும் என வங்கி அறிவித்துள்ளது (பூ)

## மூல்லைத்தீவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி குண்டு வீச்சினால் இப்பகுதியில் உள்ள ஆறு வீடுகள் முற்றாகச் சேதமடைந்துவிட்டனவெனவும் தெரியவருகின்றது. (வி)

## மண்டைதீவு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இப்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

இதே வேளை மண்டைதீவு கடற்பகுதியில் நேற்று 5 பீரங்கி படகுகள் நங்கூரமிட்டு நின்றதாகவும் தெரிய வருகிறது. [சி]

## பொத்துவில

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கள் தெரிவிக்கின்றன.

குடியமர்த்தப்படும் சிங்கள மீனவர்களுக்கு நவீனவசதிகள் பொருத்தப்பட்ட மோட்டார் படகுகளும் மற்றும் பிடிக்கப்படும் மீன்களை உடனுக்குடன் கொழும்பிற்கும் மற்றும் மலையகப்பகுதிகளுக்கும் எடுத்துச் செல்வதற்கு வசதிகள் செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிம்களுக்கு இவ்வாறான வசதிகள் செய்து தரப்படவில்லையென முஸ்லிம்கள் பெரும் அதிருப்தி தெரிவிக்கிறார்கள்.

இதேவேளையில் மள்ளம் போன்ற கிராமங்களில் வசித்துவரும் தமிழ் மக்கள் சிங்கள கூலிப்படைகளாலும், முஸ்லிம் ஊர்காவல் படையினராலும்விரட்டியடிக்கப்படுவது மாத்திரமன்றி இவர்களின் வீடுகள் அழிக்கப்பட்டும் பல பெறுமதியான பொருட்கள் ஊர்காவல் படையினரால் கொள்ளையடிக்கப்பட்டும் பல தமிழர் கொலைசெய்யப்பட்டும் உள்ளனர். (க)

## வடபகுதி மின்சாரசபை ஊழியரை தெ.பகுதிக்கு மாற்றமுயற்சி

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் பணிபுரியும் மின்சாரசபை ஊழியர்கள் பலரைத் தெற்கிற்கு இடம்மாற்றத் தலைமை அலுவலகம் நடவடிக்கை எடுத்துவருவதாகச் சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

வடக்கில் மின்சாரம் இல்லாதவேளையில் இப்பகுதி ஊழியர்களுக்கு மாதாந்த வேதனமாகக் கூடுதல் நிதி வழங்கப்பட்டு வருவதாகவும் தென்பகுதிகளில் வெற்றிடங்கள் இருப்பதாகவும், இந்நிலையில் இப்பகுதி ஊழியர்கள் பலரைத் தென்பகுதிக்கு இடம் மாற்றக் கொழும்பு அலுவலகம் முயற்சிகள் எடுப்பதாக அறிய வருகிறது. (150)

## காரைநகரில் புலிகள் கடும் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து நேற்றுக்காலை வெளியே வர முற்பட்ட இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கடும் தாக்குதலில் இராணுவதரப்பில் பலத்தசேதம் ஏற்பட்டதுடன் இராணுவத்தினர் பின்வாங்கி மீண்டும் முகாமுக்கு சென்றனர்.

### வீரமரணம்

மேற்படி மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் உத்தவர் (தங்கவடிவேல் சந்திரகுமார் - வல்வெட்டித்துறை). சிவம்[கந்தையா சாந்தகுமார்-தாளையடி) ஆகிய இருவேங்கைகள் வீரமரணமடைந்தனர்.

இவ்விரு வீரவேங்கைகளின் புகழுடம்புகள் இன்று மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு வடமராட்சி மாவீரர் மயானத்துக்கு எடுத்துச்சென்று தீயுடன் சங்கமமாக்கப்படும். [வி]

## தீவுப்பகுதி மக்கள் ஆலயங்களில் தஞ்சம்

(காரைநகர்]

கடந்தவாரம் காரைநகர் தாக்குதல் நடைபெற்றதிலிருந்து தீவுப்பகுதி மக்கள் அன்னை வேளாங்கண்ணி ஆலயம், சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலயம் ஆகியவற்றிலேயே இரவு நேரங்களில் தங்கியுள்ளனர்.

இரவு நேரத்தில் விமானத் தாக்குதல், ஷெல்தாக்குதல் ஆகியவற்றிலிருந்து தங்களை காப்பாற்றுவதற்காகவே அவர்கள் இவ்வாறு தங்கி வருகின்றனர்.

## காரைநகரில்

1-ம் பக்கத் தொடர்ச்சி]

தாக்குதலை மேற்கொண்டிருப்பதாய் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

## சாவகச்சேரி

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப்பட்ட குண்டுவீச்சில் ஒருவர் காயமடைந்ததுடன் சிலவீடுகளும்சேதமடைத்தன. பாடசாலை ஒன்றும் சேதமடைந்தாலும் அச்சமயத்தில் மாணவர் இல்லாதிருந்ததால் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை.

மட்டுவில் தெற்கில் இடம் பெற்ற குண்டுவீச்சில் சில வீடுகள் சேதமடைந்தன.

வலி-வடக்குப் பகுதியில் நேற்று மாலை தச்சன்காடு, கட்டுவன், வீமன்காமம், தெல்லிப்பழை ஆகிய பகுதிகளிலும் இரு பொம்மர்கள் குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன. 56))

## தமிழ்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இத்தகவலை பரீட்சை ஆணையாளர் திரு. ஆதர்வெதமுல்ல தெரிவித்துள்ளார். (ரி-சி)

## புலிகளுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

'விடுதலைப் புலிகளுக்கு இது ஒரு இறுதிச் சந்தர்ப்பம்' என திரு. பிரேமதாஸா கடந்தசில தினங்களுக்குமுன் கொழும்பில் கூட்டமொன்றில் கூறியதாக பி. பி.ஸி. தெரிவித்தது.

தமது பதவிக் காலத்துள் புலிகள் தன்னுடன்பேசி கடைசிச் சந்தர்ப்பத்தை இழக்கக் கூடாதென்றும் ஜனாதிபதி கூறியுள்ளாராம். (சி)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சிதம்பரம்

காரைநகர் களபூமியைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவி சிதம்பரம் சிவபதமடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற குமாரவேலு சங்கரப்பிள்ளையின் சிரேஷ்ட புதல்வியும். கதிர்காமம் இராமகிருஷ்ண மிஷனில் கடமையாற்றிய சபாரத்தினம், மங்கையக்கரசி [இங்கிலாந்து], தனலட்சுமி, காலஞ்சென்ற துரைசிங்கம் ஆகியோரின் அன்புத்தாயாரும், வைத்திய கலாநிதி க சற்குரு (இங்கிலாந்து), க. விஸ்வலிங்கம் (இளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளர்], மீனம்பிகை ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெயசீலன் (இங்கிலாந்து], சண்முகநாதன் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு பாட்டியுமாவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் இன்று (13-4-91) சனிக்கிழமை காலை 10 மணியளவில், 374, நாவலர் வீதியில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு தகனக் கிரிகைக்காக எடுத்துச்செல்லப்படும்.

தகவல்: க. விஸ்வலிங்கம்

(சி- 4640)